MCOP.No. 34/2021

Dated : 28.03.2024

Time: 11.59 a.m to 12.10 p.m

P.W- 1 சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை.

**2**ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை

1) நான் பயணம் செய்த இரண்டு சக்கர வாகனத்தை செங்குட்டுவேலவன் தான் ஓட்டி சென்றார். MCOP 87/ 21 என்ற வழக்கில் மனுதாரர் என்றால் சரிதான். எங்கள் மீது மோதிய கார் எதிராகத்தான் வந்தது. நாங்கள் பயணம் செய்த பாதையின் வலது எல்லையில் விபத்து நடந்தது. நான் என்னுடைய முதல் விசாரணையில் மேற்படி கார் ஓட்டுநர் மதுபோதையில் அஜாக்கிரதையாக ஓட்டி வந்து விபத்து நடந்து விட்டது என சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். இறுதி அறிக்கையும் அவ்வாறுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விதிமீறலாக வாகனம் ஓட்டியதால் 1 ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு தர வேண்டும் என்றால் இல்லை இன்சூரன்ஸ் கம்பெனி தான் இழப்பீடு தரவேண்டும். விபத்திற்கு இரண்டு சக்கர வாகனத்தை ஓட்டியவர் தான் காரணம் என்பதால் நான் முழுமையான இழப்பீடு கோர முடியாது என்றால் அது தவறு. விபத்தால் எனக்கு எந்த வருமான இழப்பு, உடல் ஊனமோ ஏற்படவில்லை என்றால் அது தவறு. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பிசியோதரபி பில்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரி இல்ல. மேலும் என்னுடைய வாகனத்திற்கான இழப்பீடுகளை இரண்டாம் எதிர்மனுதாரருக்கு எதிராக பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

**மூன்றாம் எதிர் மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை.**

விபத்து சமயத்தில் நான் பின்னமர்ந்து சென்ற வாகனம் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டியவர். சாலை விதிகளை பின்பற்றி நிதானமாகத்தான் ஓட்டிச் சென்றனர். இந்த விபத்திற்கு காரணம் கார் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிதான் விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரிதான். எனக்கு இழப்பீடு தர

வேண்டும் என்றால். காரின் ஓட்டுநரும் அதன் காப்பீட்டு நிறுவனம் தான் தர வேண்டும் என்றால் சரிதான். மூன்றாம் எதிர்மனுதாரராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan**
**Accidents Claim Tribunal, Attur**